# விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்கள்.

Mrs. D. Vithukshana,
*Lecturer (Probationary),*
*Department of Education and Childcare,*
*Faculty of Arts and Culture,*
*Eastern University, Sri Lanka.*

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் அனைவருக்கும் கல்வியை உறுதி செய்வதற்கு விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தரமான கல்வியைப் பெறுவற்கான வாய்ப்பை நிச்சயப்படுத்திக் கொள்வது தற்காலத்தினுடைய ஒரு அத்தியாவசியத் தேவையாக உள்ளது. இருப்பினும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் காணப்படும் விசேட கல்வி அலகுகளில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி மேம்பாடானது கிழக்கு மாகாணத்திலுள்ள மற்றைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் தாழ்நிலையில் உள்ளது. இக் கல்வி மேம்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக அப்பாடசாலைகளின் அதிபர்கள் காணப்படுகின்றனர். இதனை எடுத்தியம்புவதாக இவ் அளவை நிலை ஆய்வானது விசேட கல்வி அலகுகளிலுள்ள விசேட தேவையுடைய மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் விசேட கல்வி அலகுகளை உடைய ஆறு 1AB, 12 1C, இரண்டு வகை II, ஒரு வகை III பாடசாலைகளின் அதிபர்கள் (21), விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் (21), தன்னார்வலர்கள் (25), விசேட தேவையுடைய மாணவர்கள் (143), அவர்களின் பெற்றோர்கள் (143), விசேட கல்வி அலகிற்கான சேவைக்கால ஆலோசகர்கள் (5) போன்றோரை நோக்க மாதிரியினூடாகத் தெரிவு செய்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணம் மூலமாக அவர்களிடமிருந்து அளவு மற்றும் பண்பு ரீதியாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவை எண் சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும்விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்கள், அதிபர்கள் பற்றி அறிதல், அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அதிபர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளை மதிப்பிடல், அவர்களுக்கான கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அவற்றைக் குறைப்பதற்கான வழிமுறைகளும் போன்ற ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் அளவு, பண்பு ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளான ஆய்வுப்பிரதேசத்தில் 143 விசேட தேவை கொண்ட மாணவர்களில் 23% ஆனவர்கள் மனவளர்ச்சிக் குறைபாட்டாலும், 14% ஆனவர்கள் டவுண் சகசத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர், விசேட கல்வி அலகிலுள்ள 90% ஆன அதிபர்கள் விசேட தேவைக் கல்வி தொடர்பான மிகக் குறைந்த கல்வித் தகைமையோடு காணப்படுகின்றனர், 85% ஆன அதிபர்கள் விசேட கல்வி அலகுகளை உள்வாங்கிய வகையில் வள ஒதுக்கீடுகளையோ, மேற்பார்வைகளையோ மேற்கொள்வதில்லை, 100 சதவீதமான அதிபர்கள் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களுடனான கூட்டங்களில் பங்கு கொள்வதில்லை, விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் வள ஒதுக்கீடு, பெற்றோர்களின் வகிபங்கு, ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டின் வாண்மை, அதிபர்களின் விசேட தேவைக் கல்வி பற்றிய எண்ணம் போன்ற காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன போன்ற முடிவுகளுக்கு

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வியின் அவசியம் தொடர்பில் அதிபர்களுக்கும், பாடசாலை உள்ளக உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வளித்தல், அதிபர் வள ஒதுக்கீட்டை மேற்கொள்ளும் போது விசேட கல்வி அலகை உள்வாங்கிய வகையில் வளங்களை வழங்குதல், வலய மட்ட மேற்பார்வைகள் விசேட கல்வி அலகினை உள்ளடக்கிய வகையில் இடம்பெறுவதை பாடசாலை அதிபர்கள் வலய கல்வி பணிப்பாளருக்கு உறுதி செய்தல், விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றிய அறிவுடனும், அவர்களை முகாமை செய்யக் கூடிய திறனையும் கொண்டிருத்தல், அத்திறனை குறித்த வளவாளர்களினூடாக அதிபர்களுக்கு வழங்க வலய மட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற விதப்புரைகளும் இவ்வாய்வில் வழங்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *அதிபர்கள், கல்வி மேம்பாடு, சவால்கள், விசேட கல்வி அலகு, விசேட தேவையுடைய மாணவர்கள்.*

### *1.0* அறிமுகம்

### *1.1* ஆய்வு அறிமுகம்

நவீன உலகில் மாறிவருகின்ற சமூக மாற்றங்களுக்கேற்பவும், சமகாலத் தேவைகளுக்கேற்பவும் அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் தரமான கல்வி என்ற சிந்தனை வேரூன்றியுள்ளது. இதனடிப்படையில் கல்வியானது சமத்துவமான முறையில் அனைவருக்கும் கிடைக்க வேண்டியது அவசியமாகும். இதனை உறுதிப்படுத்தும் முகமாக பல்வேறு சர்வதேச ரீதியிலான சட்டங்கள், உடன்படிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் கல்வியானது அனைவருக்கும் பாகுபாடின்றி வழங்கப்பட வேண்டும் என சலமன்கா அறிக்கை குறிப்பிடுகின்றது.

உலகெங்கும் கல்வி துரித கதியில் மிகப் பரவலாக மாற்றமடைந்தும், வளர்ச்சியடைந்தும் வருகின்றது. இக்காலகட்டத்தில் கல்வியின் முக்கியத்துவம் பெருகிவருகின்றது. அனைத்து மாணவர்களும் தொடர்ந்து கற்றல், கற்பித்தலினூடாக அறிவு, திறன், மனப்பாங்கில் வளர்ச்சி பெறவும், சமூகத்தில் நல்ல மனிதனாகவும், தானும் சமூகத்தின் ஓர் அங்கத்தவன் எனும் உணர்வுடன் வாழவும் செவிப்புலனற்றோர், விழிப்புலனற்றோர், மந்தப்புத்தியுடையோர், உடலியற் குறைபாடுடையோர் போன்ற விசேட தேவையுடையோர் கல்வி பெற வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. சகலரும் கல்வியைப் பெறுவதற்குரிய உரிமை உடையவர்களே. ஆகவே விசேட தேவையுடையோர் தமது திறமைகளை அபிவிருத்தி செய்து, தமது அபிலாசைகளை அடைந்துகொள்வதற்கும், தமக்குத் தேவையான மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், கல்வி, பயிற்சி, புனர்வாழ்வு மற்றும் போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உடையவர்கள். இதனைக் கருத்திற் கொண்டே உள்ளடங்கல் கல்வி என்னும் எண்ணக்கரு உருவாக்கப்பட்டது.

உள்ளடங்கல் கல்வியை அடிப்படையாகக் கொண்டு விசேட தேவை கொண்ட மாணவர்களுக்கான கல்வியைக் கொண்டு நடாத்துவதற்காக இலங்கைப் பாடசாலைகளில் சாதாரண வகுப்பறைகளுக்குள் கற்றல், கற்பித்தலில் ஈடுபடக்கூடிய விசேட தேவைகொண்ட மாணவர்களை இணைத்து கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதனைவிட சில மாணவர்கள் சில மாறுபட்டதும், வேறுபட்டதுமான உடலியல், உளவியல் தேவைகளைக் கொண்ட விசேட தேவைகள் சார் மாணவர்களாகக் காணப்படுவர். அம்மாணவர்களுக்கான தேவைகளை நிறைவுசெய்யக்கூடிய வகையில் “வேறுபட்ட கலைத்திட்டம்” மற்றும் அதற்கான பயிற்சிபெற்ற ஆசிரியர்களைக் கொண்டு விசேட கல்வி அலகு எனும் அமைப்பு பாடசாலைகளினுள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது (National Council for Special Education, 2014).

விசேட தேவை கல்வி என்பது உடல், உள அல்லது சமூக ரீதியான மற்றும் பொதுவான பாடசாலை செயற்பாடுகள் தொடர்பான அவர்களின் மாற்றங்களுக்கேற்ற விதத்தில் சிறப்பான, தனித்துவமான தேவைகளுடன் கூடிய பிள்ளைகள் தொடர்பான கல்வியாகும். இத்தகைய கல்வியை வழங்குவதில் முகாமைத்துவ ரீதியில் மிகப் பெரும் பொறுப்புடையவர்கள் அதிபர்கள் ஆவார்கள். அவர்கள் இத்தகைய கல்வியை வழங்குவதிலும், அவர்களின் கல்வியை மேம்படுத்துவதிலும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இதன்படி இலங்கையில் 7 502 விசேட தேவையுடைய மாணவர்கள் விசேட கல்வி அலகில் கல்வி பயில்கின்றனர் (கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள வருடாந்த மதிப்பீட்டு அறிக்கை, 2022). ஆனால் இவர்களில் 5.7%ஆனோரே க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பட்டம் பெறுபவர்களாகக் காணப்படுகின்றனர். மிகுதி 94.3% ஆனோரின் கல்வியை மேம்படுத்துவதில் பல தடைகள் காணப்படுகின்றது. இத் தடைகளை எதிர்கொண்டு அவர்களில் விருத்தி ஏற்படுத்துவதில் முக்கிய வகிபங்கை உடையவராக அதிபர்கள் காணப்படுகின்றனர்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் பாடம், நேரம், வகுப்பறை கவின்நிலை, பௌதீக வளங்கள், கற்பித்தல் துணைச்சாதனங்கள், விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோரின் ஒத்துழைப்பு மற்றும் ஊக்குவிப்பு என்பனவும் அவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் சவால்களை ஏற்படுத்துகின்றது. இவ் அனைத்து அம்சங்களுக்கும் பொறுப்பானவராகவும், அச்சவால்களை நிவர்த்தி செய்ய வேண்டியவர்களாகவும் அதிபர்கள் காணப்படுகின்றனர். எனவே அவர்களின் கல்வியை மேம்படுத்த தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தி வழங்கும் பொறுப்பு பாடசாலையின் முகாமையாளர் என்ற ரீதியில் அதிபருக்குள்ளது. அவ்வாறு மேற்கொள்ளும்போதே அவர்களின் கல்வி மேம்படும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்களை ஆராய்ந்து அச்சவால்களை குறைப்பதற்கான வழிகளை கண்டறிவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய விதத்தில் இவ்வாய்வுத் தலைப்பானது ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 1.2 ஆய்வுப் பிரச்சினை

கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கூடுதலான விசேட தேவையுடைய குடும்பங்கள் காணப்படுகின்றன. இதில் விசேட தேவையுடைய பிள்ளைகளின் தொகையும் அதிகமாகவே காணப்படுகின்றது. இவை தொடர்பான விபரம் அட்டவணை 1.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.1 : கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட அடிப்படையிலான விசேட தேவையுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை.**

| மாவட்டம் | விபரம் | வகை அடிப்படையிலான விசேட தேவையுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை | | | | | | | | மொத்தம் | முழுமையான மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதோர் | பார்வைக் குறைபாடுடையோர் | கைகளை இழந்தோர் | கால்களை இழந்தோர் | மனரீதியாகப் பாதிக்கப்பட்டோர் | முதுகெலும்பு பிரச்சினை நீர்கட்டுகளைக் கொண்டோர் | வலிப்புடையோர். | வேறு வகையுடையோர் | | |
| அம்பாறை | முழுமையாக | 966 | 306 | 277 | 240 | 1261 | 205 | 219 | 414 | 3888 | 7964 |
| | பகுதியாக | 386 | 344 | 303 | 579 | 1199 | 176 | 287 | 802 | 4076 | |
| **மட்டக்களப்பு** | முழுமையாக | **408** | **308** | **204** | **411** | **773** | **139** | **300** | **837** | **3380** | **8100** |
| | பகுதியாக | **459** | **559** | **522** | **1227** | **627** | **35** | **187** | **1104** | **4720** | |
| திருகோணமலை | முழுமையாக | 427 | 338 | 147 | 236 | 721 | 40 | 22 | 387 | 2318 | 4713 |
| | பகுதியாக | 149 | 183 | 106 | 314 | 384 | 92 | 108 | 1059 | 2395 | |

(மூலம் : கிழக்கு மாகாண புள்ளிவிபரவியல் திணைக்களம், திருகோணமலை- 2022)

அட்டவணை 1.1 இன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 8100 விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்றனர். இது ஒப்பீட்டளவில் கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டத்தை விட அதிகமாகும். இதனால் இவ்வாய்வுப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விசேட கல்வி அலகிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களிடம் உள்ளடங்கல் கல்வி, விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றிய விளக்கம் இருந்த போதும் அம்மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாத நிலையை அவதானிக்க முடிகிறது. அத்துடன் பாடசாலைகளில் சகல செயற்பாடுகளிலும் இவ்வகை மாணவர்களுக்குரிய இடம் வழங்கப்படுகிறதா என்பது ஆய்வுக்குரிய விடயமாகவே உள்ளது. இதற்கு பொறுப்பு வாய்ந்தவராக அதிபர்கள் காணப்படுகின்றனர். கேதீஸ்வரன், (2019) என்பவர் அம்பாறை மாவட்டத்தில்“The Operation of Special Education Unit in the Regular Schools and Future Possibilities for Supporting the Implementation of Inclusive Education System”எனும் ஆய்விற்காக அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில்61.6%ஆன விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் விசேட கல்வியில் தேசிய டிப்ளோமாவையும்,10.5%ஆசிரியர்கள் விசேட கல்வியில் சான்றிதழ் கற்கையை நிறைவு செய்தவர்களாகவும்,7%ஆசிரியர்கள் விசேட கல்வியில் மற்றும் கல்வியியல் துறையில் முன்பட்டக்கற்கையை நிறைவு செய்தவர்களாகவும் காணப்படுகின்றனர் எனவும்,20%இற்கு மேலான ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான துறைசார் தகுதியற்று உள்ளனர் எனத் தனது ஆய்விற்கான

முடிவுகளை வெளியிட்டுள்ளார். இவ் ஆய்வு முடிவானது ஆய்வுப் பிரதேசத்திலுள்ள ஆய்வுப்பிரச்சினையுடன் தொடர்புடைய வகையில் அமைவதால் இவ்வாய்வுப் பிரச்சினை ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளை உள்ளடக்கிய பாடசாலைகளில் உள்ளடங்கல் கல்வி என்ற அடிப்படையில் வகுப்பறைகளில் எல்லா மாணவர்களுடனும் இணைத்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் உள்ளடக்கப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லாத நிலையை அவதானிக்கலாம். இதற்கு மிகமுக்கிய காரணம் பாடசாலை நிர்வாகத்தின் திட்டமிடல் சார் குறைபாடும், பெற்றோரின் ஈடுபாட்டுக் குறைவும், மாணவர்களின் ஆர்வமற்ற தன்மையும், ஆசிரியர்களின் திறன் சார் குறைபாடுமே ஆகும். இவை அனைத்தும் ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களுக்குக் கற்பிப்பதில் சவால்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய ஆசிரியர் சார் சவால்களுக்கான காரணிகளை அறிவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

1960 இல் உள்ளடங்கல் கல்வி பற்றிய சட்ட விதிமுறைகள் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1990 இல் இலங்கை "யாவருக்கும் கல்வி" என்னும் கொள்கையை சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொண்டது. 1994 இல் உள்ளடங்கல் கல்வியெனும் எண்ணக்கரு இலங்கையில் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1997 இல் 1005/3 ஆம் இலக்க சட்டத்தில் விசேட கல்விக்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 5 தொடக்கம் 14 வயதுக்கிடையிலான எல்லாப் பிள்ளைகளுக்குமான கல்வியானது கட்டாயமாக்கப்பட்டது. அத்தோடு உள்ளடங்கல் கல்வி எனும் எண்ணக்கரு ஒரு கல்விக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது (தேசியக் கல்வி ஆணைக்குழு அறிக்கை, 1960).

இதன்படி உள்ளடங்கல் கல்வி மூலமாக விசேட தேவையுடைய மாணவர்களும் பாடசாலைக் கல்வியை பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் பாடசாலைகளில் 2006 இல் விசேட கல்வி அலகு எனும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் அவை எந்தளவு விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் அமைகின்றது என்பது சந்தேகத்திற்குரிய விடயமாகக் காணப்படுவதோடு, அவர்களின் கல்வியை விருத்தி செய்வதில் பொறுப்பு வாய்ந்தவர்களாக அதிபர்கள் காணப்படுகின்றனர். இருப்பினும் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவ்வாறு விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அச்சவால்களைக் குறைத்து விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைப்பது ஆய்வாளனின் எதிர்பார்ப்பாகும்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் கல்வி அடைவு குறைவாக உள்ளது.

**1.3 ஆய்வு நோக்கம்**

**பொது நோக்கம்**

பாடசாலையில் விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல்.

**சிறப்பு நோக்கம்**

1. விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்கள், அதிபர்கள் பற்றி அறிதல்.
2. விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக அதிபர்கள் நடைமுறையில் மேற்கொள்ளும் செயற்பாடுகளை கண்டறிதல்.
3. விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்தல்.
4. விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைத்தல்.

## 2.0 இலக்கிய மீளாய்வு

சிவகுமார், (2009) என்பவர் விசேட கல்வி மற்றும் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளுக்கான கல்வி பற்றி "விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்" எனும் தனது நூலில் பின்வருமாறு விளக்கியுள்ளார். விசேட கல்வி என்பது உடல், உள, சமூக, மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்களாகவும், சாதாரண மாணவர்களை விட பல சிக்கலான நடத்தைகளைக் காட்டுகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். அவ்வாறான மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியே விசேட கல்வி ஆகும். அத்தோடு மனத்தடங்கல், கற்றல் குறைபாடுகள், உறுப்புக்கள் ஊனமுற்ற மற்றும் உணர்வு குழம்புகின்ற மாணவர்களைக் கையாள்வதற்கான கல்வியே விசேட கல்வி எனப்படும். மேலும் சாதாரண பிள்ளைகளை விட வேறுபட்ட தன்மைகளையுடைய பிள்ளைகளாகவும், வகுப்பறைக் கற்பித்தல் சூழ்நிலைக்கேற்றவாறு தங்கள் துலங்கலை ஏற்படுத்த முடியாது அவதியுறுபவர்களே விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் ஆவார்கள் என வரைவிலக்கப்படுத்துகிறார்.

Mokgaestsi, (2019) என்பவர் தென்னாபிரிக்காவில் Mokwatedi எனும் பாடசாலையிலுள்ள 258 விசேட தேவையுடைய மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு "விசேட தேவையுடைய மாணவர்களது தாழ் அடைவில் பங்களிப்புச் செய்யும் பாடசாலை சார்ந்த காரணிகள்" எனும் ஆய்வில் பாடசாலையில் காணப்படும் வசதிகள் குறைபாடு, கற்பித்தற் துணைச்சாதனங்களின் குறைபாடு, வகுப்பறைக் கவின்நிலைப்படுத்தப்படாமை என்பன தாழ் அடைவிற்கான காரணங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளன.

Mohammed Aalim, (2020) என்பரால் பாக்கிஸ்தானில் உள்ள பஞ்சாப் எனும் இடத்திலுள்ள 16 கட்புலப் பாதிப்புடைய பிள்ளைகள் கற்கும் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு அம்மாணவர்களின் கற்றல் அடைவு குறைந்த மட்டத்தில் இருப்பதற்கான காரணிகள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்காக லாகோர், முல்தான், சர்காதா போன்ற பிரதேசங்களில் காணப்படும் 16 கட்புல பாதிப்புடைய மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அம்மாணவர்களுக்கு அடைவுப் பரீட்சை, ஆசிரியர் நேர்காணல், வினாக்கொத்து மற்றும் அவதானிப்புப் படிவம் என்பவற்றினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. விசேட தேவையுடைய மாணவர்களின் அடைவுப் பரீட்சையில் அம்மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் இடையானது 26.5 ஆகும். இவருடைய ஆய்வில் பாடசாலை அமைந்துள்ள பிரதேசம், பாடசாலையின் தரம் என்பவற்றிற்கேற்பவும் அடைவுமட்டம் வேறுபட்டுள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்புல ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாமை, எல்லா மாணவர்களும் பொதுக் கல்வித் திட்டத்தைப் பின்பற்றுதல், வகுப்புக்களில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருத்தல், பாடநூல் போதியளவு பயிற்சிகளற்று இருத்தல் போன்றன அவர்களின் கல்வி மேம்பாட்டுக் குறைவுக்குக்கான காரணங்களாக அவ்வாய்வில் முன்வைக்கப்பட்டன. இவ்வாய்வு கட்புல ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியதாகக் காணப்படினும் அவ்வாய்வில் பயன்படுத்தபட்டுள்ள பாடசாலையின் சூழல் பற்றிய காரணி ஆய்வுப் பிரதேசமான மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுப் பிரச்சினையோடு தொடர்புறுவதால் இவ்வாய்வு இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Hershc, Waxman Yuvan, Hsanlee, Angus, *(2008)* போன்ற அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் "விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் அடைவை மேம்படுத்துவதற்கு அதிபர்கள் கையாளும் உக்திகள்" எனும் தலைப்பில் ஒரு ஆய்வை மேற்கொண்டனர். இது விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வித் தேவை தொடர்பான அதிபர்களின் புலக்காட்சியையும், அவற்றை மேம்படுத்துவதற்கு அதிபர்கள் கையாளும் உக்திகளையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது. இதில் கிடைக்கப்பட்ட முடிவுகள்.

1. ஒவ்வொரு மாணவரினதும் விசேட தேவையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குத் தேவையான கற்றல், கற்பித்தலுக்கான வளங்களை பெற்றுக்கொடுத்தல்.
2. விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் கல்வி அவசியம் எனும் மனப்பாங்கை ஏற்படுத்தல் வேண்டும்.
3. உரிய, பொருத்தமான பரிகாரமுறைக் கற்பித்தல் செயற்பாடுகள்.
4. பொருத்தமான, கவர்ச்சிகரமான கற்பித்தல் முறையை நடைமுறைப்படுத்தல்.
5. விசேட தேவையுடைய மாணவர்களை தனியானதொரு முறையின் கீழ் மேற்பார்வை செய்தல்.
6. ஆசிரியர்களின் விசேட தேவைக் கல்வி தொடர்பான தொழில்சார் திறன்களை விருத்தி செய்தல்.
7. ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்.
8. பெற்றோர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளல் என்பனவாக அமைந்தன.

### 3.0 ஆய்வு முறையியல்

ஆய்வு தொடர்பான கோட்பாடு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு சம்பந்தப்பட்ட விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களிடத்திலிருந்தும், தன்னார்வலர்களிடத்திலிருந்தும் வினாக்கொத்து மூலமாகவும், பாடசாலை அதிபர்கள், விசேட கல்வி அலகிற்கான சேவைக்கால ஆலோசகர்கள், விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும், விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களை அவதானிப்படிவத்தின் மூலமான அவதானிப்பில் பெறப்பட்டுள்ள தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்ற அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளதால் இவ்வாய்வு ஒரு கலப்பு ஆய்வு அணுகுமுறையில் அமைந்துள்ளது அத்தோடு

வினாக்கொத்து, அவதானம் மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமையப்பெற்றுள்ளதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

### 3.1 மாதிரித் தெரிவு

ஆய்வுப் பிரதேமான மட்டக்களப்பு மாவட்டத்தில் 21 விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளில் 143 மாணவர்கள் தற்போது கல்வி கற்கின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளனால் குறிப்பட்ட பிரதேசம் ஆய்வுப் பிரதேசமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்விற்கான மாதிரிகளாகப் பாடசாலைகளைத் தெரிவு செய்வதற்கு நோக்க மாதிரியெடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய வகையில் 361 பாடசாலைகள் காணப்படுகின்றது. அதில் விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளாக 21 பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆய்வுப் பிரச்சினையினதும், ஆய்வுத் தலைப்பினதும் மையப்பொருளாக விசேட கல்வி அலகு காணப்படுவதால் அவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்க மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் காணப்படும் 21 விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளும் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் ஒரு 1AB பாடசாலையும், ஒரு வகை III பாடசாலையும், ஒரு வகை II பாடசாலையுமென மொத்தமாக மூன்று பாடசாலைகளும், கல்குடா கல்வி வலயத்தில் மூன்று 1AB பாடசாலைகளும், ஒரு 1C பாடசாலையும், ஒரு வகை II பாடசாலையுமென மொத்தமாக ஐந்து பாடசாலைகளும், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் ஐந்து 1C பாடசாலைகளும், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் ஒரு 1AB பாடசாலையும், இரண்டு 1C பாடசாலைகளுமென மொத்தமாக மூன்று பாடசாலைகளும், பட்டிருப்பு கல்வி வலயத்தில் ஒரு 1AB பாடசாலையும், நான்கு 1C பாடசாலைகளுமென மொத்தமாக ஐந்து பாடசாலைகளுமாக 21 விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகள் ஆய்வாளனால் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன

இவ்வாய்வு விசேட கல்வி அலகில் கற்கும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு என்பதனால் விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளாக ஆய்வுப் பிரதேசமான மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் காணப்படும் 21 பாடசாலைகளிலும் விசேட கல்வி அலகில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 21 விசேட கல்வி அலகு கொண்ட பாடசாலைகளில் இருந்தும் விசேட கல்வி அலகில் கல்வி பயிலும் 143 மாணவர்களும் ஆய்வின் மாதிரியாக ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்காக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதன்படி அம்மாணவர்கள் அதிகம் தொடர்புபடும் நபர்களான அவர்களது பெற்றோர்கள் இவ்வாய்வுக்காக மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி 21 பாடசாலைகளிலும் விசேட கல்வி அலகில் கற்கும் 143 விசேட தேவை கொண்ட மாணவர்களின் 143 பெற்றோர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் முழுவதுமாக மாதிரியாக ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வின் நோக்கம் மற்றும் தேவைப்பாடு கருதியும் மாதிரித் தெரிவாகத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களின் பெற்றோர்களும் ஆய்விற்கான மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

இவ்வாய்வு விசேட கல்வி அலகு பற்றிய ஆய்வாக அமைவதால் ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் போதும் இதனைக் கருத்தில் கொண்டே ஆசிரியர்கள் மாதிரிகளாக ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளாக காணப்படும் 21 பாடசாலைகளிலும் பாடசாலைக்கு ஒருவர் எனும் அடிப்படையில் விசேட கல்வி அலகுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி 21 விசேட கல்வி அலகிலுள்ள பாடசாலைகளிலும் 21 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் ஆய்வின் நோக்கம் கருதியும், ஆய்வுப் பிரச்சினையும் மையப்பொருளாகவும் காணப்படுவதால் நோக்கமாதிரியின் அடிப்படையில் அவர்கள் ஆய்வுக்காக மாதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 21 விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளிலும் 25 தன்னார்வலர்களும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கின்றனர். இவர்களும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் பணியில் ஈடுபடுவதனால் அவர்களும் நோக்கமாதிரியின் அடிப்படையில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் 21 ஆசிரியர்களும், 25 தன்னார்வலர்களுமாக மொத்தமாக 46 ஆசிரியர்கள் நோக்க மாதிரியெடுப்பு முறையின் மூலம் ஆய்வுக்காக மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாய்வு விசேட கல்வி அலகில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறியும் வகையில் அமைவதால் ஆய்வின் முக்கிய மாறியான அதிபர்கள் ஆய்வு செய்வது அவசியமாகவுள்ளது.இதன்படி தெரிவு செய்யப்பட்ட 21 விசேட கல்வி அலகுகளைக் கொண்ட பாடசாலைகளை நிர்வகிக்கும் 21 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் இவ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் காணப்படும் 21 விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவை கொண்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அவ் ஐந்து கல்வி வலயங்களும் பொறுப்பாக இருப்பதனால் அவை தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆய்வின் நோக்கம் கருதி விசேட கல்வி அலகுக்காக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள விசேட கல்வி அலகுக்கான சேவைக்கால ஆலோசகர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி வலயத்திற்கு ஒருவர் எனும் அடிப்படையில் ஒவ்வொரு வலயத்திற்கும் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி ஐந்து வலயத்திலுமுள்ள ஐந்து விசேட கல்வி அலகுக்கான சேவைக்கால ஆலோசகர்களும் நோக்க மாதிரியெடுப்பு முறையின் அடிப்படையில் இவ்வாய்வுக்காக ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இவ்வாய்வுக்குத் தேவையான மாதிரிகள் பொருத்தமானவாறும், அணுகக் கூடியவாறும் ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### 4.0 தரவுப் பகுப்பாய்வுகள்


#### 4.1 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்கள், அதிபர்கள் பற்றி அறிதல்.

**வினாக்கொத்தின் மூலம் வினவிய வினாக்களுக்கான பகுப்பாய்வு முடிவுகள்.**


© 2025, IRJTSR

விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் குறைபாடுகளையும், அவர்களின் எண்ணிக்கை தொடர்பான புள்ளிவிபரங்களையும் அறிந்து கொள்ளும் பொருட்டு விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் குறைபாடுகளையும், அக்குறைபாட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக? என விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களிடமும், தன்னார்வலர்களிடமும் வினாக்கொத்து மூலமாக வினவப்பட்ட அளவு ரீதியான வினாவுக்கு வழங்கப்பட்ட பதில்களை உரு 4.1 காட்டுகிறது.


**உரு 4.1 : விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் குறைபாடுகளும், அக்குறைபாட்டால் பாதிக்கப்பட்ட**




**மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களின் கருத்து**

இப்பதில் நிலைகளை வைத்து நோக்குகின்றபோது அதிகமான மாணவர்கள் அதாவது 23% ஆன மாணவர்கள் மனவளர்ச்சிக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். அடுத்த நிலையில் 14% ஆன மாணவர்கள் டவுண் சகசத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றிய அதிபரின் மனப்பாங்கு பற்றிய கண்டறியும் நோக்கில் விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் கல்வி தொடர்பாக அதிபரின் மனப்பாங்கு எத்தகையது? எனும் அளவு ரீதியான வினாவுக்கு விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களும், தன்னார்வலர்களும் வழங்கிய பதில்களை



உரு 4.2 காட்டுகிறது.

**உரு 4.2 : விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி தொடர்பான அதிபரின் மனப்பாங்கு தொடர்பான விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களின் கருத்துக்கள்.**

இத்தரவுப் பகுப்பாய்வு முடிவுகளின்படி 90%இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அதிபர் சாதாரண மாணவர்களுக்கு மட்டுமே கல்வி அவசியம் எனும் மனப்பாங்கோடும், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்க முடியாது எனும் மனப்பாங்கோடும் இருக்கின்றனர் என்பது புலப்படுத்தப்படுகின்றது.

இதன்படி,Sing, (2015) என்பவர் உள்ளடங்கல் கல்வி பற்றி இந்தியாவில் மேற்கொண்ட ஆய்வின் படி உள்ளடங்கல் கல்வியில் சில தடைகள் இருப்பதாகக் கண்டறிந்தார். இவ் ஆய்வில் பாடசாலை சார்பாக விசேட தேவையுடைய மாணவர்களுடன் தொடர்பான அதிபரின் முகாமைத்துவ ரீதியான பாரபட்ச தன்மை, அதிபரின் விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகள் பற்றிய எதிர்மாறான மனப்பாங்கு என்பவற்றால் பொருத்தமான கற்பித்தல் துணைச்சாதனங்கள் வழங்கப்படாதிருத்தல் என்பன அம் மாணவர்களின் கற்றலில் தாக்கம் செலுத்துவதாகவும், அது மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு தடையாக அமைவதாகவும் தனது ஆய்வு முடிவை வெளியிட்டார். இவ்வாய்வு முடிவுகளின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட தரவுப் பகுப்பாய்வின்படி ஆய்வுப் பிரதேசத்திலும் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி தொடர்பான எதிர்மாறான மனப்பாங்கோடு அதிபர்கள் காணப்படுகின்றனர். இதுவும் அம்மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் தடைகளை ஏற்படுத்தும். இதன்படி மேற்காட்டப்பட்ட ஆய்வு முடிவுகளானது மேற்குறிப்பிடப்பட்ட தரவுப் பகுப்பாய்வு முடிவுகளுடன் பெரிதும் ஒத்துச் செல்லும் வகையில் காணப்படுகின்றது.


இது தொடர்பாக மேலும் அறிந்து கொள்ளும் நோக்கில் விசேட தேவையுடைய மாணவர்களின் உள்ளக மேற்பார்வை தொடர்பாக அறிந்து கொள்ளும் பொருட்டு,விசேட கல்வி அலகில் நடைபெறும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் அதிபரால் உள்ளக ரீதியில் மேற்பார்வைகள் செய்யப்பட்டு பின்னூட்டல் வழங்கப்படுகின்றதா?இல்லை எனில், காரணம் தருக? எனும் பண்பு ரீதியான வினாவுக்கு 90.48 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை எனும் பதிலையும் வழங்கியுள்ளனர்.

இதற்கு விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் பல்வேறு பதில்களை வழங்கியிருந்தனர். அவற்றைத் தொகுத்து நோக்குவோமாயின்,விசேட கல்வி அலகினுடைய கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மிகக்குறைவான அதிபர்களே மேற்பார்வைகள் செய்வதோடு அது தொடர்பான முறையான பின்னூட்டலை வழங்குவதும் மிகக் குறைவாக உள்ளதாகவும், அவர்கள் சாதாரண மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும்போது பயன்படுத்தும் படிவத்தையே விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் மேற்பார்வையின் போதும் பயன்படுத்துகின்றனர் எனவும், இதனால் இம்மதிப்பீடு விசேட தேவையுடைய மாணவர்களுக்குப் பொருத்தமான மதிப்பீடாக அமையாது என விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் பதிலளித்துள்ளனர்.

**4.2 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக அதிபர்கள் நடைமுறையில் மேற்கொள்ளும் செயற்பாடுகளை கண்டறிதல்.**

**வினாக்கொத்தின் மூலம் வினவிய வினாக்களுக்கான பகுப்பாய்வு முடிவுகள்.**

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைகளைக் கவின்நிலைப்படுத்துவதுவதிலும், பாடசாலைச் சூழலை அமைப்பதிலும் அதிபரின் வகிபங்கை அறிந்து கொள்ளும் பொருட்டு,விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைகளை கவின்நிலைப்படுத்துவதற்கும், பாடசாலைச் சூழலை வடிவமைப்பதற்கும், கற்பித்தலை மேற்கொள்வதற்கும் தேவையான கற்பித்தல் துணைச்சாதனங்கள் போன்ற தேவையான வளங்கள் அதிபரால் வழங்கப்படுகின்றதா? எனும் அளவு ரீதியான வினாவுக்கு விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் வழங்கிய பதில்களை உரு 4.3 காட்டுகிறது.




**உரு 4.3 : விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைகளை கவின்நிலைப்படுத்துவதற்கும், பாடசாலைச் சூழலை வடிவமைப்பதற்கும், கற்பிப்பதற்குமான கற்பித்தல் துணைச்சாதனங்கள் போன்ற தேவையான வளங்கள் அதிபரால் வழங்கப்படுகின்றதா? எனும் வினாவுக்கு விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் வழங்கிய கருத்துக்கள்.**

இத்தரவுப் பகுப்பாய்வு முடிவின்படி 80 சதவீதத்திற்கு மேற்பட்ட விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களும், தன்னார்வலர்களும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைகளை கவின்நிலைப்படுத்துவதற்கும், வகுப்பறைச் சூழலை வடிவமைப்பதற்கும்,கற்பித்தலை மேற்கொள்வதற்கும் தேவையான கற்பித்தல் துணைச்சாதனங்கள் போன்ற தேவையான வளங்கள் அதிபரால் வழங்கப்படுவதில்லை எனப் பதிலளித்துள்ளனர்.

இதன்படி,Shannon, (2004) என்பவர் விஸ்கோன் ஸ்டௌட் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட "சாதாரண மாணவர்களுடன் விசேட தேவையுடையுடைய மாணவர்களையும் சாதாரண வகுப்பறைகளில் இணைத்துக் கற்பிப்பதில் உள்ள அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள்" எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் அதிபரின் முகாமைத்துவப் பிரச்சினைகள் அவர்களின் கற்றலில் அதிகம் பாதிப்பு செலுத்தியது எனும் முடிவை கண்டறிந்துள்ளார். விசேட தேவை கொண்டவர்களது கற்றல் மேம்பாட்டிற்கு அதிபரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என அவர்கள் கண்டறிந்ததோடு பௌதீக வளங்கள், செயற்பாட்டு அறைகள், நவீன கட்புல, செவிப்புல சாதனங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள், மேலதிக கற்றல், கற்பித்தல் நடிவடிக்கைகளைத் திட்டமிட்டு வழங்கி விசேட தேவை கொண்ட மாணவர்களது அடிப்படைத் தேர்ச்சி மட்டத்தை உயர்த்துவதற்கு அதிபர்களது முகாமைத்துவ திறன் அவசியமானதொன்றாகும் எனவும் கண்டறிந்தனர். இவ்வாய்வின் முடிவின்படி அதிபரின் விசேட தேவையுடைய மாணவர்களின் வகுப்பறைகளைக் கவின்நிலைப்படுத்தல் தொடர்பான வகிபங்கானது அவர்களின் கல்வி மேம்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதேபோல் இக்காரணி ஆய்வுப் பிரதேசத்திலும் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் பாதிப்பை

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR 

ஏற்படுத்துகிறது எனும் முடிவுக்கு வரமுடியும். இவ்வாய்வு முடிவுகள் மேற்காட்டப்பட்ட தரவுப் பகுப்பாய்வு முடிவுகளோடு பெரிதும் ஒத்துப்போகும் வகையில் காணப்படுகின்றது.


**நேர்காணலின் மூலம் வினவிய வினாக்களுக்கான பகுப்பாய்வு முடிவுகள்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலுமுள்ள விசேட கல்வி அலகிற்குப் பொறுப்பான ஐந்து ஆசிரிய ஆலோசகரிடம் விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக அதிபர்கள் நடைமுறையில் பின்பற்றும் செயற்பாடுகளை குறிப்பிடுக எனும் பண்பு ரீதியான வினாவுக்கு விசேட கல்வி அலகிற்கான அடிப்படை புரிதலோடு அனைத்து அதிபர்களும் பாடசாலை நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபடும் போக்கு குறைவாகக் காணப்படுகின்றது எனவும், வளப் பற்றாக்குறை, விசேட கல்வி அலகுக்கென வளத்தை ஒதுக்குவதில் காணப்படும் சிக்கல், மற்றும் சுற்றுநிரூபங்களில் எழுத்தில் இருக்கும் முறையை அமுல்படுத்துவது கடினம் எனும் மனப்பாங்கோடு அதிபர்கள் காணப்படுவது சாதாரண மாணவர்கள் உள்ள வகுப்பறையின் மீதான அதிபரின் ஈடுபாட்டை விட விசேட கல்வி அலகின் மீதான குறைந்த ஈடுபாடு அவர்களின் செயற்பாடுகளில் தாக்கத்தை செலுத்துகின்றது என்ற கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

***4.3 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்தல்.***

**நேர்காணலின் மூலம் வினவிய வினாக்களுக்கான பகுப்பாய்வு முடிவுகள்.**


விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் தொடர்பாகக் கண்டறியும் நோக்கில் விசேட கல்வி அலகிற்கான ஆசிரிய ஆலோசகர் மற்றும் அதிபர்களிடம் நேர்காணல் மூலம் வினவிய வினாக்களுக்கு அவர்களின் அளித்த பதில்கள் உரு 4.4 இல் காட்டப்பட்டுள்ளது.



**உரு 4.4: விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் பற்றிய அதிபர்கள், விசேட கல்வி அலகிற்கான ஆசிரிய ஆலோசகர்களின் கருத்துக்கள்**


உரு 4.4 இன்படி ஆசிரியர்களின் குறைந்த பட்ட கல்வித் தரமும், பயிற்சியற்ற தன்மையும் ஆய்வுப் பிரதேசத்தில் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பது இதிலிருந்து எடுத்துக்காட்டப்படுகின்றது.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கண்டறியும் நோக்கில் விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள், தன்னார்வலர்கள், விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், விசேட கல்வி அலகிற்கான ஆசிரிய ஆலோசகர், விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களிடம் வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் வினவிய வினாக்களுக்கு அவர்கள் அளித்த துலங்கல்களை உரு 4.5 மற்றும் 4.6 காட்டுகின்றது.




**உரு 4.5: விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் கற்பிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான ஆசிரியர்கள், தன்னார்வலர்களின் கருத்துக்கள்**

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்




**உரு 4.6: விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் கற்பிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அதிபர்கள், ஆசிரிய ஆலோசகரின் கருத்துக்கள்**

உரு 4.5 மற்றும் 4.5 இற்கமைவாக விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பொருத்தமான கலைத்திட்டமின்மை மற்றும் விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றிய அதிபரின், பெற்றோர்களின் எதிர்மறையான மனப்பாங்கு அவர்களின் கல்வியில் தாக்கம் செலுத்துகின்றது என்பதை 90 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் குறிப்பிட்டுள்ளனர்.

### 4.4 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைத்தல்.

விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு அதிபர்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பு தொடர்பாக அறிந்து கொள்ளும் பொருட்டு, விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்த அதிபர் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்கள் 03 தருக? எனும் பண்பு ரீதியான வினாவை ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட 21 விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களிடம் வினவிய போது அவர்கள் வழங்கிய பதில்களை தொகுத்து நோக்குவோமாயின்,

- (R1) விசேட தேவையுடையோர் கல்வி தொடர்பான எதிர்மனப்பாங்கை மாற்ற வேண்டும்.
- (R2) விசேட தேவையுடைய மாணவர்களுக்கேற்றால்போல் பாடசாலைச் சூழலை மாற்ற வேண்டும்.
- (R3) விசேட தேவையுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக முறையாக உள்ளக மேற்பார்வைகளை மேற்கொள்ள வேண்டும்.
- (R4) விசேட தேவையுடைய மாணவர்களுக்கான உதவிகளை அரசு, அரசு சாராத நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொடுக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- (R5) வளப்பகிர்வை மேற்கொள்ளும் போது விசேட தேவை அலகையும் உள்வாங்கிய வகையில் முறையான வளப்பகிர்வை மேற்கொள்ள வேண்டும்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR

**அட்டவணை 4.1 : விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு அதிபர்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்கள் தொடர்பாக ஆசிரியர்களினால் கூறப்பட்ட கருத்துக்கள்**

| வலயம் | ஒவ்வொரு வலயத்திலும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை | R1 | % | R2 | % | R3 | % | R4 | % | R5 | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு மேற்கு | 3 | 3 | 100 | 3 | 100 | 2 | 66.66 | 1 | 33.33 | 2 | 66.66 |
| கல்குடா | 5 | 5 | 100 | 4 | 80 | 3 | 60 | 3 | 60 | 4 | 80 |
| மட்டக்களப்பு | 5 | 4 | 80 | 3 | 60 | 4 | 80 | 5 | 100 | 4 | 80 |
| மட்டக்களப்பு மத்தி | 3 | 3 | 100 | 1 | 33.33 | 2 | 66.66 | 3 | 100 | 3 | 100 |
| பட்டிருப்பு | 5 | 4 | 80 | 4 | 80 | 3 | 60 | 5 | 100 | 4 | 80 |

மூலம் : விசேட கல்வி அலகுக்கான ஆசிரியர்களின் வினாக்கொத்திலிருந்து பெறப்பட்டவை.

**நேர்காணல் மூலம் வினவிய வினாக்களுக்காக பகுப்பாய்வு முடிவுகள்.**

இது தொடர்பாக மேலும் அறிந்து கொள்ளும் பொருட்டு,விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்த அதிபர் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்களைக் குறிப்பிடுக? எனும் வினாவிற்கு விசேட கல்வி அலகிற்கான சேவைக்கால ஆலோசகர்கள் பலதரப்பட்ட பதில்களை வழங்கியிருந்தார். அவற்றைத் தொகுத்து நோக்குவோமாயின், அதிபர் ஒரு பாடசாலையின் முகாமையாளர் என்ற வகையில் அவரின் ஒவ்வொரு செயற்பாடும் சாதாரண மாணவர்களினைப் போன்று விசேட தேவையுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். முறையான வளப்பகிர்வு, மருத்துவ வசதி, பொருத்தமான பௌதீக வளத்தை அமைத்தல், முறையான மேற்பார்வை,விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றை அதிபர் மேற்கொள்ளும்போது விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியானது ஆசிரியர்களுக்கு சவால்களை ஏற்படுத்தாது மேம்பாடடையும் எனப் பதிலளித்துள்ளனர். சேவைக்கால ஆலோசகரின் இக்கருத்து முடிவுகள், ஆசிரியரின் தரவுப் பகுப்பாய்வு முடிவுகளுடனும் ஒத்துச் செல்வதைக் காணமுடிகின்றது.

இது தொடர்பாக மேலும் அறிந்து கொள்ளும் நோக்கில் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களிடம் இதே வினாவை வினவிய போது அவர்கள் பல்வேறு பதில்களை வழங்கியிருந்தனர். அவற்றைத் தொகுத்து நோக்குவோமாயின், அதிபர்கள் விசேட தேவையுடைய மாணவர்களை சாதாரண மாணவர்களைப்போல் பார்க்க வேண்டுமெனவும், அவர்களின் கல்வி மேம்பாட்டுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அதிபர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனப் பதிலளித்துள்ளனர். பெற்றோர்களின்

இக்கருத்து முடிவுகள் சேவைக்கால ஆலோசகர்களின், ஆசிரியர்களின் தரவுப் பகுப்பாய்வு முடிவுகளுடனும் ஒத்துச் செல்வதைக் காணமுடிகின்றது.

### 5.0 முடிவுகளும் விதப்புரைகளும்

### 5.1 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்கள், அதிபர்கள் பற்றி அறிதல்.

**முடிவுகள்**

1. ஆய்வுப்பிரதேசத்தில் 143 விசேட தேவை கொண்ட மாணவர்கள் காணப்படுகின்றனர். இதில் 23% ஆன மாணவர்கள் மனவளர்ச்சிக் குறைபாட்டாலும், 14% ஆன மாணவர்கள் டவுண் சகசத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
2. ஆய்வுப் பிரதேசத்தில் 90%இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அதிபர் சாதாரண மாணவர்களுக்கு மட்டுமே கல்வி அவசியம் எனும் மனப்பாங்கோடும், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்க முடியாது எனும் மனப்பாங்கோடும் இருக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.
3. விசேட கல்வி அலகில் நடைபெறும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மிகக்குறைவான அதிபர்களே மேற்பார்வைகள் செய்வதோடு அது தொடர்பான முறையான பின்னூட்டலை வழங்குவதும் மிகக் குறைவாகவே உள்ளது.
4. ஆய்வுப் பிரதேசத்திலுள்ள அதிபர்கள் அதிபர்கள் சாதாரண மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும்போது பயன்படுத்தும் படிவத்தையே விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களின் மேற்பார்வையின் போதும் பயன்படுத்துகின்றனர்.

**விதப்புரைகள்**

1. ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் விசேட தேவைக் குறைபாடு தொடர்பான மருத்துவ, பௌதீக, அடிப்படை தேவைகளை அறிந்து வைத்திருக்க வேண்டும்.
2. விசேட கல்வி அலகுள்ள பாடசாலை அதிபர்கள் குறைந்தது விசேட தேவை கல்வி தொடர்பான டிப்ளோமா கற்கையை நிறைவு செய்ய வேண்டும் என்பதை கல்வி மட்ட தராதரத்துடன் இணைக்க வேண்டும்.
3. முறைசாராக் கல்விக் கிளையால் விசேட கல்வி அலகிற்கான உள்ளக மேற்பார்வை செய்யப்பட்டமைக்கான அறிக்கைகளை பரிசீலனை செய்து அவற்றின் உண்மைத் தன்மை தொடர்பாக அதிபருடன் நேரடியான கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும்.
4. விசேட கல்வி அலகின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை மதிப்பிடுவதற்கென தகுந்த நிபுணர்களைக் கொண்டு மேற்பார்வைப் படிவத்தை தயார் செய்து அதன்படி மேற்பார்வை இடம்பெற வேண்டும்.

### 5.2 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக அதிபர்கள் நடைமுறையில் மேற்கொள்ளும் செயற்பாடுகளை கண்டறிதல்.

**முடிவுகள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைகளை கவின்நிலைப்படுத்துவதற்கும், வகுப்பறைச் சூழலை வடிவமைப்பதற்கும்,கற்பித்தலை மேற்கொள்வதற்கும் தேவையான கற்பித்தல்

துணைச்சாதனங்கள் போன்ற தேவையான வளங்கள் அதிபரால் வழங்கப்படும் போக்கு குறைவாக உள்ளது.

2. விசேட கல்வி அலகிற்கான அடிப்படை புரிதலோடு அனைத்து அதிபர்களும் பாடசாலை நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபடும் போக்கு குறைவாகக் காணப்படுகின்றது.
3. விசேட கல்வி அலகுக்கென வளத்தை ஒதுக்குவதில் காணப்படும் சிக்கல், மற்றும் சுற்றுநிரூபங்களில் எழுத்தில் இருக்கும் முறையை அமுல்படுத்துவது கடினம் எனும் மனப்பாங்கோடு ஆய்வுப் பிரதேசத்தில் அதிபர்கள் காணப்படுகின்றனர்.
4. சாதாரண மாணவர்கள் உள்ள வகுப்பறையின் மீதான அதிபரின் ஈடுபாட்டோடு விசேட கல்வி அலகின் மீதான அதிபரின் ஈடுபாட்டை ஒப்பிடும் போது அது மிகக் குறைந்தளவிலேயே உள்ளது.

**விதப்புரைகள்**

1. அதிபர் விசேட தேவை கொண்ட பிள்ளைகளும் பிள்ளைகளே, அவர்களும் கல்வி கற்க உரிமை உண்டு என்ற புரிந்துணர்வைக் கொண்டு காணப்பட வேண்டும். இதனை கல்விச் சமூக மட்டத்திலும் ஏற்படுத்த வேண்டும்.
2. வலய மட்ட அதிகாரிகள், முறைசாராக் கல்வி கிளையினர் விசேட கல்வி அலகுள்ள அதிபர்கள் சிறப்பாக செயற்படும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும்.
3. வலய மட்டத்தில் வள ஒதுக்கீடுகளில் விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளுக்கென உரிய வளப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

**5.3 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்தல்.**

1. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 21 விசேட கல்வி அலகுள்ள எந்தப் பாடசாலைகளிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சரிவுப் பாதை வசதியோ, மலசல கூடங்களோ அமைக்கப்படவில்லை.
2. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விசேட கல்வி அலகிலுள்ள 95% இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும், தன்னார்வலர்களும் விசேட தேவையுடையோருக்கு பொருத்தமான வகுப்பறைச்சூழல் காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.
3. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்க முடியாது என்ற மனப்பாங்கோடு ஆய்வுப்பிரதேசத்திலுள்ள விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளின் பெரும்பாலான அதிபர்கள் காணப்படுகின்றனர் என 98% இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும், தன்னார்வலர்களும் தெரிவித்துள்ளனர்.
4. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தலை மேற்கொள்வதற்குரிய பிரத்தியேக கலைத்திட்டம் வடிவமைக்கப்படவில்லை.

**விதப்புரைகள்**

1. விசேட தேவையுடையோருக்குத் தேவையான வளங்களை வலயத்தினூடாகப் பெறுவதற்கு அதிபர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

2. விசேட தேவையுடைய மாணவர்களும் கல்வி கற்கும் அடிப்படை உரிமையை கொண்ட மனிதர்களே எனும் மனப்பாங்கை சமூகமும், உரிய விசேட தேவைகொண்ட மாணவர்களின் பெற்றோரும் அதிபருக்கு ஏற்படுத்த வேண்டும்.
3. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பிரத்தியேகமான முறையான கலைத்திட்டமானது உரிய நிபுணத்துவம் வாய்ந்த கல்வியியலாளர்களால் உருவாக்கப்பட வேண்டும்.

***5.4 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைத்தல்.***

**முடிவுகள்**

1. விசேட தேவையுடையோர் கல்வி தொடர்பான எதிர்மனப்பாங்கை அதிபர் மாற்ற வேண்டும் என 90.47% ஆன விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.
2. 71.42% ஆன விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் அதிபர் விசேட தேவையுடைய மாணவர்களுக்கேற்றால்போல் பாடசாலைச் சூழலை மாற்ற வேண்டும் என தெரிவித்துள்ளனர்.
3. 66.66% ஆன விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக அதிபர் முறையாக உள்ளக மேற்பார்வைகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளனர்.
4. 80.95% ஆன விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான உதவிகளை அரசு, அரசு சாராத நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொடுக்க அதிபர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளனர்.
5. 80.95% ஆன விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் அதிபர் வளப்பகிர்வை மேற்கொள்ளும் போது விசேட தேவை அலகையும் உள்வாங்கிய வகையில் முறையான வளப்பகிர்வை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளனர்.
6. விசேட கல்வி அலகிற்கான 5 கல்வி வலயங்களிலுமுள்ள சேவைக்கால ஆலோசகர்கள் விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை அதிபர் ஏற்பாடு செய்து வழங்குதல் வேண்டும் என தெரிவித்துள்ளனர்.
7. விசேட தேவையுடையோருக்கான முறையான மருத்துவ வசதியை வழங்க அதிபர் ஏற்பாடு செய்தல் வேண்டும் என 100% ஆன விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

**விதப்புரைகள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களும் சாதாரண மாணவர்களே, அவர்களும் கல்வி உரிமையைப் பெற்ற மனிதர்களே எனும் மனப்பாங்கை ஆசிரியரும், சமூகமும் அதிபருக்கு ஏற்படுத்த வேண்டும்.
2. விசேட தேவையுடைய மாணவர்களுக்குப் பொருத்தமான வகையில் பாடசாலையில் சரிவுப் பாதை, குடிநீர், மலசலகூடங்கள், சமிஞ்ஞைப் பலகைகள் என்பவற்றை அமைத்திட அதிபர் அரசு நிறுவனத்திலும், தொண்டர் நிறுவனங்களிலும், பழைய மாணவர்கள், தன்வந்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளிடம் உதவிகளைப் பெற முயல வேண்டும்.

3. விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய அவர்களுக்கென பிரத்தியேகமான மேற்பார்வை நியதிகளை தயாரித்து விசேட கல்வி அலகிற்கான உள்ளக மேற்பார்வை எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.
4. சாதாரண மாணவர்களைப்போல் விசேட கல்வி அலகிற்கும் சமமான வளப்பகிர்வை மேற்கொள்ள வேண்டும். இதனை வலயக் கல்வி அலுவலகம் கண்காணித்திட வேண்டும்.
5. மாறுகின்ற சூழ்நிலைகளுக்கேற்ப விசேட கல்வி அலகுக்கான ஆசிரியரும் தனது வாண்மைகளை மேம்படுத்த உரிய பயிற்சிகளை பாடசாலை மட்டத்தில் ஏற்பாடு செய்து வழங்க அதிபர் ஆவண செய்ய வேண்டும்.
6. பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்திக்கான வாய்ப்பை விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களுக்கு அதிபர் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.
7. விசேட தேவையுடைய மாணவர்களின் குறைபாடுகளுக்கான மருத்துவ வசதிகளை பிரதேச மட்ட சுகாதார அலுவலகமானது மாதமொரு முறை பாடசாலைக்கே வருகை தந்து சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலகப் பிரிவினூடாக பெற்றுக்கொள்ள அதிபர் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

**சாரம்சம்**

உலகெங்கும் கல்வி துரித கதியில் மிகப் பரவலாக மாற்றமடைந்தும், வளர்ச்சியடைந்தும் வருகின்றது. இக்காலகட்டத்தில் கல்வியின் முக்கியத்துவம் பெருகிவருகின்றது. அனைத்து மாணவர்களும் தொடர்ந்து கற்றல், கற்பித்தலினூடாக அறிவு, திறன், மனப்பாங்கில் வளர்ச்சி பெறவும், சமூகத்தில் நல்ல மனிதனாகவும், தானும் சமூகத்தின் ஓர் அங்கத்தவன் எனும் உணர்வுடன் வாழவும் செவிப்புலனற்றோர், விழிப்புலனற்றோர், மந்தப்புத்தியுடையோர், உடலியற் குறைபாடுடையோர் போன்ற விசேட தேவையுடையோர் கல்வி பெற வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. சகலரும் கல்வியைப் பெறுவதற்குரிய உரிமை உடையவர்களே. ஆகவே விசேட தேவையுடையோர் தமது திறமைகளை அபிவிருத்தி செய்து, தமது அபிலாசைகளை அடைந்துகொள்வதற்கும், தமக்குத் தேவையான மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், கல்வி, பயிற்சி, புனர்வாழ்வு மற்றும் போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உடையவர்கள். இதனைக் கருத்திற் கொண்டே உள்ளடங்கல் கல்வி என்னும் எண்ணக்கரு உருவாக்கப்பட்டது.

இவ்வாய்வானது பாடசாலையில் விசேட கல்வி அலகில் உள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக் களமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விசேட கல்வி அலகைக் கொண்ட பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை விருத்தி செய்வதில் ஆசிரியருக்கு தடைகளை ஏற்படுத்தும் காரணிகளைக் கண்டறிந்து, அதற்கான ஆலோசனைகளை முன்வைக்கும் போதும், அவற்றை நடைமுறைப்படுத்தும் போதும் எதிர்காலத்தில் அம்மாணவர்களின் கல்வியானது விருத்தியடையலாம் என்பது ஆய்வாளனின் எதிர்பார்ப்பாகும்.

இவ் ஆய்வானது பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்படுவதனால் பாடசாலை மட்டத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வியை வழங்குவதில் மட்டக்களப்பு மாவட்டம் என்ன நிலையில் செயற்படுகின்றது என்பது பற்றிய ஒரு மதிப்பீட்டைப் பெற முடியும். இம்மதிப்பீடானது எதிர்காலத்தில் வலய, கோட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கு


© 2025, IRJTSR

கல்வியை வழங்குவதில் உள்ள பிழைகளையும், அசௌகரியங்களையும் குறைக்க உதவுவதோடு, மாற்றுத் தீர்வுகளைக் கண்டுபிடிக்கவும், சரியான திட்டமிடல்களைச் செய்யவும், புதிய திட்டங்களை உருவாக்கவும் உதவியாக அமையும்.

### உசாத்துணைகள்


[1] அருள்மொழி, செ. *(2008).* **கல்வி ஆய்வு முறைகள்**, துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு.

[2] அருள்மொழி, செ. *(2017).* **கற்பித்தலுக்கான உளவியல்**, துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு.

[3] இலங்கை திறந்த பல்கலைக்கழகம், *(2010).* **உள்ளடங்கல் கல்வி,**இலங்கை திறந்த பல்கலைக்கழக வெளியீடு, நுகேகொட.

[4] இலங்கை திறந்த பல்கலைக்கழகம், *(2010).* **விசேட தேவைகள் சார் கல்விக்கான பல்துறை அணுகுமுறைகள்**, நாவல, நுகேகொட.

[5] கருணாநிதி, மா. *(2013).* **கற்றல், கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்**, சேமமடு புத்தகசாலை, கொழும்பு.

[6] சிவகுமார், த. *(2009).* **விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்,**குரு பிரிண்டர்ஸ், திருநெல்வேலி.


#### ஆய்வுகள்


[7] Bariroh, S. (2018). **The Influence of parents' involvement on children with Special Needs' motivation and learning achievement**, International Education Studies.

[8] Juma Hellen, J. (2020). **Challenges facing the implementation of inclusive education,** Kampal International University, Kenya.

[9] Ketheeswaran, K. (2019). **The operation of Special Education Unit in the regular schools and future possibilities for supporting the implementation of inclusive education system in Ampara District**, JUICE journal, University of Jaffna.

[10] Mokgaetsi, S. R. (2019). **Factor contributing toward poor performance of special needs students at Mokwatedi High Schools**, Unpublished Med thesis, teraflop graduate school, South Africa.




© 2025, IRJTSR